## ஜன.–15 முதல் ஜன. 18–ஆம் வரை சென்னை மாநகரில் 20 இடங்களில் நிகழ்ச்சிகள்!

# “சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழா!”

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கலை நிகழ்ச்சிகளை தொடங்கி வைத்தார்!



























**சென்னை,ஜன.18-**

**பொங்கல் திருநாளையொட்டி தமிழர்களின் பண்பாட்டுப் பெருமைகளை பறைசாற்றும் வகையில் “சென்னை சங்கமம்-நம்ம ஊரு திருவிழா” கலை நிகழ்ச்சிகளை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

**சென்னை மாநகரின் 20 இடங்களில் 15,01,2026 முதல் 18,1,2026 வரை கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 14.1.2026 அன்று சென்னை, எழும்பூர், இராஜரத்தினம் விளையாட்டரங்கத்தில் தமிழ் மண்ணின் கலைகளைக் களிப்போடு கொண்டாடும் வகையில், சென்னை மாநகரில் பல்வேறு வகையான கலை நிகழ்ச்சிகளுடன் கலை பண்பாட்டுத் துறையின் சார்பில் நடத்தப்படும் “சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழா”வை பறை இசைத்து தொடங்கி வைத்து, மாபெரும் இசை, நடன நிகழ்ச்சிகளை பார்வையிட்டார்.

சென்னையில், தை மாதம் தொடக்கத்தில் தமிழர் திருநாளாம் பொங்கல் திருவிழாவின் போது ‘சென்னை சங்கமம்-நம்ம ஊரு திருவிழா’ மாபெரும் கலைவிழா கடந்த நான்கு ஆண்டுகளாக நடத்தப்படுகிறது. இந்த ஆண்டின் கலை நிகழ்ச்சிகள் இன்றையதினம் எழும்பூர், ராஜரத்தினம் விளையாட்டரங்கில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்து, இசையமைப்பாளர் தர்புகா சிவா அவர்கள் மற்றும் இயக்குநர்

பிரவின் இயக்கத்தில் 250 கலைஞர்கள் இணைந்து நடத்திய மாபெரும் இசை, நடன நிகழ்ச்சிகளை பார்வையிட்டார்.

இவ்விழாவில், பத்மஸ்ரீ விருது பெற்ற பறை ஆசிரியர் வேலு ஆசான் அவர்களுக்கு சமர் கலைக்குழுவின் பயிற்சி பள்ளி தொடங்குவதற்கு 60 சென்ட் நிலத்தை குத்தகை அடிப்படையில் 30 ஆண்டுகளுக்கு வழங்கும் அரசாணையினை வழங்கினார். மேலும், தொடக்க விழா நிகழ்ச்சியினை ஒருங்கிணைத்த கலைஞர்களுக்கு நினைவு பரிசுகளையும் வழங்கினார்.

**அதனைத் தொடர்ந்து, கலைஞர்களையும், விழா ஏற்பாட்டாளர்களையும் பாராட்டி, வாழ்த்து தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை:**

அனைவருக்கும் வணக்கம்.

சென்னை சங்கமம் என்பது தமிழ் சங்கமமாக, ஒட்டுமொத்த கலைஞர்களின் சங்கமமாக, வெற்றி சங்கமமாக இது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கலை பண்பாட்டுத் துறை இந்த நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கிறது. அதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

கலைஞர்கள் தங்கள் படைப்பாற்றலை மிக எழுச்சியோடு, சிறப்போடு இங்கே பறைசாற்றியிருக்கிறார்கள். அதற்காக உங்கள் அனைவரின் சார்பில் அனைத்து கலைஞர்களுக்கும் என்னுடைய சல்யூட்டை அளித்துக் கொள்கிறேன்.

இந்த சங்கமம் நிகழ்ச்சியை என்னுடைய அருமை தங்கை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி அவர்கள் இதனை தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள், அதற்காக என்னுடைய பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சங்கமம் நிகழ்ச்சியில், பங்கேற்று தங்களுடைய கலை ஆற்றலை வெளிப்படுத்தி இருக்கக்கூடிய அனைவருக்கும் மீண்டும் என்னுடைய பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்து, நிச்சயமாக வரக்கூடிய காலங்களில், நம்முடைய திராவிட மாடல் அரசு இந்த கலைக்காக இன்னும் பல சாதனைகளை புரிய இருக்கிறது; புரியும். அதற்காக நான் இந்த நேரத்தில் என்னுடைய உறுதியை தெரிவித்து, கலையை வளர்ப்போம்; தமிழ்நாடு வெல்லும்; தமிழ்நாடு வெல்லும்; வெல்லும் என்று சொல்லி, என்னுடைய உரையை இந்த அளவோடு நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரை நிகழ்த்தினார்.

**சென்னை சங்கமம்-நம்ம ஊரு திருவிழா 2026**



‘சென்னை சங்கமம்-நம்ம ஊரு திருவிழா’ கலை நிகழ்ச்சிகள் பெசன்ட் நகர் எலியட்ஸ் கடற்கரை, திருவான்மியூர் கடற்கரை, மெரினா கடற்கரை, வள்ளுவர் கோட்டம், செம்மொழி பூங்கா, ராயபுரம் ராபின்சன் பூங்கா, எழும்பூர் அரசு அருங்காட்சியகம். ராஜரத்தினம் விளையாட்டரங்கம், தி.நகர் நடேசன் பூங்கா, ராஜா அண்ணாமலைபுரம்- அரசு இசைக் கல்லூரி வளாகம், கிண்டி கத்திபாரா சந்திப்பு, அண்ணாநகர் கோபுரப் பூங்கா, கோயம்பேடு ஜெய் நகர் பூங்கா, அசோக் நகர் மாநகராட்சி விளையாட்டு திடல், வளசரவாக்கம் லேமேக் பள்ளி வளாகம், ஜாபர்கான் பேட்டை மாநகராட்சி விளையாட்டுத் திடல், கொளத்தூர் மாநகராட்சி விளையாட்டு மைதானம், ஆவடி படைத்துறை உடைத் தொழிற்சாலை, பல்லாவரம் கன்டோன்மெண்ட் பூங்கா, தாம்பரம் வள்ளுவர் குருகுலம் பள்ளி மைதானம் ஆகிய 20 இடங்களில் 15.1.2026 முதல் 18.1.2026 வரை நான்கு நாட்கள் மாலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை நடைபெற உள்ளன.

‘சென்னை சங்கமம்-நம்ம ஊரு திருவிழாவில்’ தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் தேர்வு செய்யப்பட்டுள்ள 1500-க்கும் மேற்பட்ட கலைஞர்கள் நையாண்டி மேளம், கரகாட்டம், காவடியாட்டம், புரவியாட்டம், இறை நடனம், தப்பாட்டம், துடும்பாட்டம், பம்பையாட்டம், கைசிலம்பாட்டம், ஒயிலாட்டம், தேவராட்டம், சேவையாட்டம், ஜிக்காட்டம், ஜிம்பளா மேளம், பழங்குடியினர் நடனம், சிலம்பாட்டம், மல்லர் கம்பம், வில்லுபாட்டு, கணியன் கூத்து, தெருக்கூத்து, பாவைக் கூத்து, தோல்பாவைக்கூத்து, நாடகம், கிராமிய ஆடல், பாடல் உள்ளிட்ட 50-க்கும் மேற்பட்ட நாட்டுப்புற வடிவங்களை நிகழ்த்தி பார்வையாளர்களை பரவசப்படுத்துவார்கள்.

அத்துடன் புகழ்பெற்ற செவ்வியல் மற்றும் மெல்லிசை கலைஞர்களும் கலை நிகழ்ச்சிகள் வழங்க உள்ளனர். இவற்றுடன் அசாமின் பிகுநடனம், மிசோராமின் மூங்கில் நடனம், மணிப்பூரின் புங்ச் சோல்ம், மேற்கு வங்காளத்தில் பவுல் இசை, குஜராத்தின் சித்தி தமால், கேரளாவின் கோல்களி ஆகிய அயல் மாநில கலை நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளன.

சென்னையில் விழா நடைபெறும் இடங்களில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் மக்கள் விரும்பி உண்ணும் பல உணவு வகைகளைக் கொண்ட அரங்குகள் அமைக்கப்பட்டு உணவுத் திருவிழாவும் நடத்தப்பட உள்ளது. பூம்புகார் நிறுவனத்தின் சார்பில் தமிழ்நாட்டின் புகழ்பெற்ற கைவினைப் பொருட்களைக் காட்சிப்படுத்தி விற்பனை செய்யும் அரங்குகளும் அமைக்கப்படும். தமிழ்நாட்டின் பாரம்பரிய விளையாட்டுக்களை விளையாடி மகிழும் வாய்ப்புகளும் பார்வையாளர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 17.01.2026 அன்று மாலை 6.00 மணியளவில் சென்னை அருங்காட்சியக வளாகத்தில்

கோ-ஆப்டெக்ஸ் சார்பில் புகழ்பெற்ற கிராமிய கலைஞர்களின் பாரம்பரிய ஆடை அலங்கார அணிவகுப்பும் நடத்தப்பட உள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி இவ்வாண்டு மிக சிறப்பாக பொங்கல் விழாவினை கொண்டாடும் வகையில் 14.1.2026 அன்று அனைத்து மாவட்டங்களின் தலைநகர் மற்றும் கிராம ஊராட்சிகளிலும், சுய உதவிக் குழுக்கள், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், பொதுமக்கள் ஆகியோரை ஒருங்கிணைத்து சமத்துவப் பொங்கல் கொண்டாடப்பட உள்ளது. மேலும், 15.01.2026 முதல் 18.01.2026 வரை நான்கு நாட்களில் மூன்று நாட்கள் கலை பண்பாட்டுத்துறை மற்றும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மூலம் பொங்கல் விழா கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளது. இந்நிகழ்ச்சியின் மூலம் தமிழ்நாடு முழுவதும் 7500 கலைஞர்கள் பொங்கல் கலை விழா கலை நிகழ்ச்சிகள் வாய்ப்பு பெறுவார்கள்.

தமிழ்நாட்டின் பாரம்பரியத்தையும், பண்பாட்டையும் வெளிப்படுத்தும் நமது நாட்டுப்புறக் கலை வடிவங்களைப் சென்னை மற்றும் தமிழ்நாட்டின் பிற நகரங்களில் வாழும் பொதுமக்கள் கண்டு களிக்கும் வகையிலும் தமிழ்நாடு அரசு கலை பண்பாட்டுத்துறையின் சார்பில் நடத்தப்படும் சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழா மற்றும் பொங்கல் கலை நிகழ்ச்சிகள் மூலம் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கலைஞர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி பயன் பெறவும், தமிழ் மண்ணின் வளமான கலை வடிவங்கள் உயிர்போடு திகழவும் உதவுகின்றன.

இந்த விழாவில், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருமதி கனிமொழி, திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், டாக்டர் கலாநிதி வீராசாமி, அந்தியூர் செல்வராஜ், டாக்டர் கனிமொழி சோமு, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான கு. செல்வப்பெருந்தகை, சட்டமன்ற உறுப்பினர் இ. பரந்தாமன் உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர் மு. மகேஷ் குமார், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் தலைவர் வாகை சந்திரசேகர், உறுப்பினர்-செயலர் திருமதி விஜயா தாயன்பன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் (பொறுப்பு) திருமதி ச. வளர்மதி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.